வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருப்பினும், மனிதாபிமான உணர்வோடு, நிலமற்ற, வீடற்ற ஏழைகளுக்கு, அந்த வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. மைய அரசின் ஒப்புதல், தனியே இதற்குக் கோரப்படும். வன நிலத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள வீடுகளைப் பற்றி தனியே அறிக்கை பெற்று, பின்னர் முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆணையிட்டதன் பேரில், 30 குடும்பங்களுக்கு வீடுகளை அளிக்க, அந்தக் காலனிப் பகுதிக்கு, நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரைச் சூட்டியுள்ளோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, அந்த 30 குடும்பங்களுக்குக் கூடிய விரைவில் பட்டா வழங்குவதற்கு, ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஒப்புதல் கோரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 235, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

235–

தமிழக முன்னாள் முதல்வர் ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல்

***13855–திரு ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் முதல் முதலமைச்சரான ஓமந்தூர் திரு. இராமசாமி ரெட்டியார் அவர்களின் பிறந்த நாள் விழாவை அரசின் சார்பாக ஆண்டுதோறும் கொண்டாட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 236, திரு ஜி. பழனிசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

236–

வள்ளுவர் கோட்டத்தைப் பழுதுபார்த்தல்

***14596–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––

(அ) சென்னையில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தினைப் பழுது பார்க்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வள்ளுவர் கோட்டத்தைப் பழுதுபார்க்க, ரூ. 26.61 லட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வள்ளுவர் கோட்டத்தை அழகுபடுத்தவும், மேம்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுப்படி, ரூ. 6.12 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழுதுபார்க்கும் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டம், மேல்மாடம் இல்லாமல் பார்ப்பதற்குக் குட்டையாகவும், மொட்டையாகவும், யாரையோ நினைவுப்படுத்துவதைப் போல, கலையம்சமே இல்லாமல் உள்ளது. இதனைப் போக்கும் வகையில், குளுகுளு வசதியுடன் மேல் மாடம் ஒன்றை உருவாக்குவதோடு, அதனை, கைராசியும், முகராசியும் உள்ள நமது இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்துவைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டம், 1976––ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவிலே, அந்த